**Malai Malar 19-01-2007**



வெள்ளியங்கிரி மலையில் பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றும் பணி நடைபெற்ற காட்சி.

### ஈஷா அறக்கட்டளை மூலம்

# வெள்ளியங்கிரி மலையில் பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றம்

கோவை, ஜன. 19– பசுமைக்கரங்கள் திட்டம் மூலம் வெள்ளியங் கிரி மலையில் பிளாஸ்டிக் குப் பைகள் அகற்றப்பட்டன.

**வெள்ளியங்கிரி மலை**

கோவையை ஒட்டியுள்ளது வெள்ளியங்கிரிமலை. இது நீலகிரி வனப்பகுதியை சேர்ந்தது. இந்த மலையில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை லட்சக்கணக்கான மக்கள் புனித பயணம் மேற்கொண்டு வெள்ளியங்கிரி ஆண்டவரை தரிசிக்கின்றனர்.

இந்த பயணத்திற்கு சாதாரணமாக சுமார் 8 மணியில் இருந்து 12 மணி நேரம் வரை ஆகிறது. எனவே பக்தர்கள் உணவு, குடிநீர் மற்றும் தின்பண்டங்களை எடுத்துச் செல்கின்றனர்.

**பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றம்**

இவற்றை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளை மலைப் பகுதியில் அப்படியே விட்டு வருகின்றனர்.

எனவே, ஈஷா அறக் கட்டளை ஒவ்வொருவருடமும் பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழல் பாதுகாக் கும் பணியை செய்து வருகி றது.

**400 பேர் பங்கேற்பு**

அதன்படி இந்த துப் புறவு பணியை ஈஷா அறக் கட்டளையின் பசுமைகரங்கள் திட்டம் மேற்கொண்டது. தமிழக வனத்துறை, சி.ஐ.டி., பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி எஸ்.என். ஆர். கலை மற்றும் அறிவி யல் கல்லூரி மற்றும் வெள்ளி யங்கிரி ஆண்டவர் கோவில் நிர்வாகம் ஆகியவை இணைந்து நடத்தியது.

இதில் கல்லூரி மாண வர்கள், ஈஷாவின் தன்னார்வ தொண்டர்கள், பொதுமக்கள் என 400 பேர் கலந்து கொண்டனர். இவர்கள் மலையடிவாரத்தில் இருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் உள்ள மலை உச்சி வரை நீண்ட பல வளைவுகள் கொண்ட பாதையில் சென்று பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றினர்.

**300 சாக்குப் பைகள்**

அவைகளை சுமார் 300 சாக்கு பைகளில் சேகரித் தனர். இவற்றை ஈஷா அறக் கட்டளை மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.

DINAMALAR 21 JAN 2007

# வெள்ளிங்கிரி மலையில் 300 மூட்டை பிளாஸ்டிக் கழிவு பொருட்கள் அகற்றம்

கோவை, ஜன. 21-

வெள்ளிங்கிரி மலைப்பகுதியில் 300 சாக்குபை நிறைய பிளாஸ்டிக் கழிவு பொருட்களை கல்லூரி மாணவர்களும், ஈஷா தன்னார்வ தொண்டர்களும் அகற்றினர்.

வெள்ளிங்கிரி மலைப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை பக்தர்கள் புனித பயணம் செல்கின்றனர். மகா சிவராத்திரிக்கும், சித்ரா பவுர்ணமிக்கும் இடைபட்ட காலத்தில் வெள்ளிங்கிரி மலையில் 8.00 மணி முதல் 12.00 மணி வரை மலை மற்றும் காட்டுப் பகுதிகளில் பக்தர்கள் பயணம் செய்கின்றனர். பக்தர்கள் உணவு, குடிநீர் ஆகியவற்றை பயன்படுத்தி ஆங்காங்கே விட்டு செல்வதால் இங்கு பெருமளவில் பிளாஸ்டிக் கழிவு சேர்கிறது. இதனால், வனப்பகுதியில் பெரும் சுகாதார கேடு ஏற்படுகிறது.

இந்த பிளாஸ்டிக் கழிவுகளை ஈஷா அறக்கட்டளை சார்பில் பசுமை கரங்கள் அமைப்பினர் ஆண்டு தோறும் அகற்றி வருகின்றனர். இந்த ஆண்டு தமிழக வனத்துறை, சி.ஐ.டி., பி.எஸ்.ஜி., கலைக்கல்லூரி, எஸ்.என்.ஆர்., கல்லூரி, வெள்ளிங்கிரி ஆண்டவர் கோவில் நிர்வாகத்தினர், ஈஷா தன்னார்வ தொண்டர்கள் என 400 பேர் வெள்ளிங்கிரி மலைப்பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

வெள்ளிங்கிரி மலை அடிவாரத்தில் இருந்து ஆயிரத்து 500 மீட்டர் உயரமுள்ள மலை உச்சி வரை இந்த துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. இதில், 300 சாக்குப்பை நிறைய பிளாஸ்டிக் கழிவு பொருட்கள் அகற்றப்பட்டது.

எதிர்காலத்தில் வெள்ளிங்கிரி மலைக்கு வரும் பக்தர்கள் பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக வாழை மட்டை, தேக்கு மர இலை, மஞ்சள் இலைகளை பயன்படுத்த ஈஷா அறக்கட்டளை கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், பசுமைக் கரங்கள் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 கோடி மரங்களை நட திட்டமிடப்பட்டுள்ளது.

MAALAI MALAR 19 JAN 2007



வெள்ளியங்கிரி மலையில் பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றும் பணி நடைபெற்ற காட்சி.

### ஈஷா அறக்கட்டளை மூலம்

# வெள்ளியங்கிரி மலையில் பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றம்

கோவை, ஜன. 19– பசுமைக்கரங்கள் திட்டம் மூலம் வெள்ளியங்கிரி மலையில் பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றப்பட்டன.

**வெள்ளியங்கிரி மலை**

கோவையை ஒட்டியுள்ளது வெள்ளியங்கிரிமலை. இது நீலகிரி வனப்பகுதியை சேர்ந்தது. இந்த மலையில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை லட்சக்கணக்கான மக்கள் புனித பயணம் மேற்கொண்டு வெள்ளியங்கிரி ஆண்டவரை தரிசிக்கின்றனர்.

இந்த பயணத்திற்கு சாதாரணமாக சுமார் 8 மணியில் இருந்து 12 மணி நேரம் வரை ஆகிறது. எனவே பக்தர்கள் உணவு, குடிநீர் மற்றும் தின்பண்டங்களை எடுத்துச் செல்கின்றனர்.

**பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றம்**

இவற்றை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளை மலைப் பகுதியில் அப்படியே விட்டு வருகின்றனர்.

எனவே, ஈஷா அறக்கட்டளை ஒவ்வொருவருடமும் பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழல் பாதுகாக்கும் பணியை செய்து வருகிறது.

**400 பேர் பங்கேற்பு**

அதன்படி இந்த துப்புறவு பணியை ஈஷா அறக்கட்டளையின் பசுமைகரங்கள் திட்டம் மேற்கொண்டது. தமிழக வனத்துறை, சி.ஐ.டி., பி.எல்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி எல்.என். ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் நிர்வாகம் ஆகியவை இணைந்து நடத்தியது.

இதில் கல்லூரி மாணவர்கள், ஈஷாவின் தன்னார்வ தொண்டர்கள், பொதுமக்கள் என 400 பேர் கலந்து கொண்டனர். இவர்கள் மலையடிவாரத்தில் இருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் உள்ள மலை உச்சி வரை நீண்ட பல வளைவுகள் கொண்ட பாதையில் சென்று பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றினர்.

**300 சாக்குப் பைகள்**

அவைகளை சுமார் 300 சாக்கு பைகளில் சேகரித்தனர். இவற்றை ஈஷா அறக்கட்டளை மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.

# வெள்ளியங்கிரி மலையில் துப்புரவுப் பணி: 300 சாக்குப் பைகளில் பிளாஸ்டிக் குப்பை சேகரிப்பு

கோவை, ஜன. 19: ஈஷா அறக்கட்டளை சார்பில் கோவையை அடுத்த வெள்ளியங்கிரி மலைப் பகுதியில் நடந்த துப்புரவுப் பணியில் 300 சாக்குப் பைகளில் பிளாஸ்டிக் குப்பைகள் சேகரிக்கப்பட்டன.

வனத்துறை, சிறுடி கல்லூரி, பிஎஸ்ஜி கலை அறிவியல் கல்லூரி, எஸ்.என்.ஆர். கல்லூரி, வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில் நிர்வாகம், ஈஷா யோக மையம் ஆகியன இணைந்து இப் பணியை மேற்கொண்டன.

மலை அடிவாரத்தில் இருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் உள்ள மலை உச்சி வரை நீண்ட வளைவுகள் கொண்ட பாதையில் இப் பணி நடந்தது. கல்லூரி மாணவர்கள், ஈஷா தன்னார்வத் தொண்டர்கள், பொதுமக்கள் என 400 பேர் இப் பணியில் ஈடுபட்டனர்.



வெள்ளியங்கிரி மலையில் பிளாஸ்டிக் குப்பைகள் சேகரிக்கும் பணியில் கல்லூரி மாணவர்கள்.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் மார்ச் வரை வெள்ளியங்கிரி மலைக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை வருகின்றனர். மகா சிவராத்திரி மற்றும் சித்ரா பவுர்ணமிக்கு இடைப்பட்ட நாள்களில் பக்தர்கள் எண்ணிக்கை மிக அதிக அளவில் இருக்கும்.

இப் பயணம் ஏறத்தாழ 8-லிருந்து 12 மணிநேரம் வரை இருப்பதால் பக்தர்கள் உணவு, குடிநீருக்கு பிளாஸ்டிக் பைகளை எடுத்துச் செல்கின்றனர். இதனால் வழியெங்கும் பக்தர்கள் விட்டுச் செல்லும் பிளாஸ்டிக் கழிவுகளால் வனப் பகுதியின் சூழல் மாசுபடுகிறது.

அதோடு இறந்த வன விலங்குகளின் குடல் பகுதியில் பிளாஸ்டிக் பொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. பிளாஸ்டிக் குப்பைகள் வன விலங்குகளின் உயிருக்கு நேரடியான அச்சுறுத்தலாக இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு வெள்ளியங்கிரி மலை சூழல் பாதுகாப்புக்காக ஈஷா அறக்கட்டளையால் பசுமைக் கரங்கள் திட்டம் தொடங்கப்பட்டது.

பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றுதல், துணிப் பைகளை இலவசமாக வழங்குதல், சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி வெள்ளியங்கிரி மலையில் பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றும் பணி அண்மையில் நடைபெற்றது. பக்தர்கள் விட்டுச் சென்ற பிளாஸ்டிக் குப்பைகள் 300 சாக்குப் பைகளில் சேகரிக்கப்பட்டன. இவற்றை மறுசுழற்சிக்கு அனுப்பும் பணியை ஈஷா அறக்கட்டளை மேற்கொள்ளும்.

பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றும் பணியில் ஈடுபட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் ஈஷா அறக்கட்டளை சுவாமி அபிபாதா, வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயில் செயல் அலுவலர் பி.ஆர்.ராஜ்மோகன், இக்கரை போளுவாம்பட்டி வனச்சரகர் ஜி.ராஜேஸ்வரன்

## மாநிலம் முழுவதும்

# ஒரே ஆண்டில் 2.5 கோடி மரம் வளர்க்க திட்டம்

## ஈஷா பவுண்டேஷன் ஏற்பாடு

**கோவை, ஜன.19:** மாநிலம் முழுவதும் 2.5 கோடி மரக்கன்றுகளை நட்டு வளர்க்க ஈஷா பவுண்டேசன் திட்டமிட்டுள்ளது.

கோவை ஆலாந்துறையை அடுத்த வெள்ளிங்கிரி மலையில் ஈஷா அமைப்பின் பசுமைக்கரங்கள் திட்டம் மூலம் பிளாஸ்டிக் ஒழிப்பு பணி நடந்தது. தமிழக வனத்துறை, சி.ஐ.டி கல்லூரி, பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி, எஸ்.என்.ஆர் கல்லூரி, வெள்ளிங்கிரி ஆண்டவர் கோயில் நிர்வாகம் ஆகியன திரளாக இப்பணியில் பங்கேற்றன. மலையில் பக்தர்கள் விட்டுச் சென்ற பிளாஸ்டிக் குப்பைகள் 300 சாக்குப்பைகளில் சேகரிக்கப்பட்டன.

மலை அடிவாரத்தில் இருந்து ஆயிரத்து 500 மீட்டர் உயரத்தில் உள்ள மலை உச்சி வரை பிளாஸ்டிக் சேகரிக்கும் பணி நடந்தது. சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் குப்பைகள் ஈஷா அமைப்பின் மூலம் மறுசுழற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வரும் காலங்களில் பக்தர்கள் பிளாஸ்டிக் கைப்பைகளுக்கு பதிலாக வாழை, தேக்கு மர மட்டைகளை பயன்படுத்த ஈஷா நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், பசுமைக் கரங்கள் திட்டம் மூலம் 5 வருடங்களில் 1 கோடியே 14 மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கப்பட உள்ளது.

இந்த வருடம் மட்டும் மாநிலம் முழுவதும் 2.5 கோடி மரக்கன்றுகளை நட்டு வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக பசுமைக்கரம் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

பிளாஸ்டிக் ஒழிப்பு பணியில் ஈடுபட்ட மாணவர்களுக்கு ஈஷா அறக்கட்டளையைச் சேர்ந்த சுவாமி அபிபாதா, வெள்ளிங்கிரி கோயில் செயல் அலுவலர் ராஜ்மோகன், போளுவாம்பட்டி வன அலுவலர் ராஜேஜஸ்வரன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்.

DinaKaran 19-01-2007